R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2018-2020
Date of Publication: 10th of Every Month
Posted on 10th of Every Month at Batlagundu Post office.
August 2018












தமிழகத்தில்

வேர்ல்டு இவான்ஞ்சலிசம்
வேதாகம பள்ளி
மாணவர்களும்
ஆசிரியர்களும்

*Our Radio Program:* Sri Lanka Radio SW 31 Meter Every Saturday 5.15 P.M & Our TV Program: Nambikkai TV Every Saturday 8.00 P.M & Tamilan TV Every Thursday 6.00 P.M

*Cell : 94435 58041*
*Phone : 04543 263 278*
*E-Mail arjunanglory@gmail.com*

*Office Address*
*The Word of Christ, D/5 Rajan Nagar*
*Batlagundu -624202, DINDIGUL DIST*
*TAMIL NADU INDIA*

To

Postman Remarks (If Undelivered):
- ☐ Refused
- ☐ No such person
- ☐ Address insufficient
- ☐ Left without instructions
- ☐ Deceased

*Our Postal Address:*
THE WORD OF CHRIST
POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

Owned and published by B.Arjunan
from 17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan



தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 18 | ஆகஸ்டு 2018 | கனி 9




THE WORD OF CHRIST

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக – கொலோசெயர் 3:16



ஆசிரியர்
B. அர்ஜுனன்

## 'The Word of Christ' Magazine Readers' Seminor at 32 Districts in Tamilnadu






# வேத அறிவுப் போட்டி எண்: 216

## போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடை பின்வரும் மாத இதழில்களில் காண்க.

1. என் உடன்படிக்கை ஜீவனும் சமாதானமுமாக இருந்தது; அவன் எனக்குப் பயப்படும் பயத்தோடே இருக்கவேண்டுமென்று, இவைகளை அவனுக்குக் கட்டளையிட்டேன் அப்படியே அவன் என் நாமத்துக்குப் பயந்தும் இருந்தான் என கர்த்தர் யாரைக் குறிப்பிடுகிறார்?
2. நீங்கள் மனுஷருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாகப் பார்வைக்கு ஊழியஞ்செய்யாமல், தேவனுக்குப் பயப்படுகிறவர்களாக எப்படிப்பட்ட இருதயத்தோடே ஊழியஞ்செய்யுங்கள் என பவுல் எழுதுகிறார்?
3. வேதாகமத்தில் மொத்த புத்தகம் 66 என்பதை அறிவோம். அதைப்போல யாக்கோபுடைய கர்ப்பப்பிறப்பாயிருந்து அவன் மூலமாய் எகிப்திலே வந்தவர்கள் எல்லாரும் எத்தனைபேர்?
4. நித்திரையடைந்தவர்களினிமித்தம் நீங்கள் நம்பிக்கையற்றவர்களான மற்றவர்களைப்போலத் துக்கித்து, அறிவில்லாதிருக்க எனக்கு மனதில்லை என்று எழுதும் அப்போஸ்தலன் யார்?
5. வாசஸ்தலத்திலிருந்து மேகம் மேலே எழும்பும்போது, இஸ்ரவேல் புத்திரர் என்ன பண்ணப் புறப்படுவார்கள்?
6. நம்முடைய தேவன் உங்களைத் தமது அழைப்புக்குப் பாத்திராக்கவும், தமது தயையுள்ள சித்தம் முழுவதையும் விசுவாசத்தின் கிரியையையும் பலமாய் உங்களிடத்தில் நிறைவேற்றவேண்டுமென்று எப்பொழுதும் உங்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறோம் என எழுதும் அப்போஸ்தலன் யார்?
7. ஆசாரியனுடைய குமாரத்தி வேசித்தனம்பண்ணி தன்னைப் பரிசுத்தக்குலைச்சலாக்கினால் அவளை என்ன செய்யவேண்டும் (நியாயப்பிரமாண காலத்தின்படி) ?
8. நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பிரசன்னமாகும்வரைக்கும், நீ இந்தக் கற்பனையை மாசில்லாமலும் குற்றமில்லாமலும் கைக்கொள் என யாருக்கு பவுல் எழுதியிருக்கிறார்?
9. ஒருவன் குமாரன் இல்லாமல் மரித்தால் அவனுக்குரிய சுதந்தரத்தை யாருக்குக் கொடுக்கவேண்டும் என்ற நியாயவிதிப்பிரமாணம் இஸ்ரவேலில் இருந்தது?
10. நீயும் அவனைக்குறித்து எச்சரிக்கையாயிரு என பவுல் யாரைக் குறிப்பிடுகிறார்?



சிறுவர் பகுதி

# தேவபக்தியின் வேஷம்

வேதவாசிப்பு: 2கொரிந்தியர் 11:13-15



வேஷம் போடுகிறவர்களைப் பார்த்து இருப்பீர்கள். அவர்கள் நடிப்பிற்காகவும், வயிற்றுப் பிழைப்பிற்காகவும் வேஷம் போடுவார்கள். அதைப்போல வயிற்றுக்கு ஊழியம் செய்கிறவர்கள், ஏமாற்றுகிறவர்கள் சத்தியத்திற்கு விரோதமாக வேஷம் போடுவார்கள். அவர்களைப் பற்றி தெரிந்து கொள்ளுங்கள். நான் ஏன் இதை உங்களுக்கு சொல்லுகிறேன் என்றால் அப்படிப்பட்டவர்களிடமிருந்து உங்களைப் பாதுகாக்கவே! கோழி எப்படி தன் குஞ்சுகளைப் பருந்துவிடமிருந்து பாதுகாக்க; பருந்து வரும்போது கூவி அழைத்து குஞ்சுகளை தன் சிறகுகளுக்குள் வைத்துக் கொள்ளுகிறதோ, அதைப்போல எதிராளிகளைக் குறித்து நாம் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

முதலாவது நமக்கு எதிராளி யார் தெரியுமா? ஓ தெரியும் சார், என்று சொல்லுவீர்கள். யார் என்றால், பள்ளிக்கூடத்தில் படிக்கிற ஒருவனைக் கூறுவீர்கள். அவனல்ல. நான் சொல்ல வருவது சாத்தானை. அவன்தான் நமக்கு எதிராளி. ஏன் அவன் நமக்கு எதிராளி? அவன் ஆதிமுதல் பாவம் செய்கிறான். தேவனுடைய பிள்ளைகளுக்கு எதிராக செயல்படுகிறான். அவன் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக்கொள்வான் என்று வேதம் கூறுகிறது. அது ஆச்சரியமல்ல, சாத்தான் சாமர்த்தியசாலியாக இருக்கிறான். அதுமட்டுமல்ல அவனைச்சார்ந்த அவனுடைய ஊழியர்கள் இருக்கிறார்களே, அவர்களும் நீதியின் ஊழியக்காரர்களுடைய வேஷத்தை தரித்துக்கொள்வார்கள். எப்படியென்று கேட்கிறீர்களா? இன்று தேவனுடைய ஊழியன் என்று சொல்லிக்கொண்டு வலம் வருகிற அநேகர் கள்ளப்போதகர்கள். ஓநாய் ஆட்டுத்தோலை போர்த்திக் கொண்டு மந்தைக்குள் வருவதைப்போல, இவர்கள் தேவஊழியர்களைப்போல வேஷமிட்டு வருவார்கள். இவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள். வெளிப்படுத்தின விசேஷத்திலே சொல்லப்பட்ட எபேசு சபையாரைப்போல அவர்களை சோதித்தறிந்து அந்தப் பொய்யரைக் கண்டறியலாம்.

இவர்களுடைய வேஷம் ஒருநாளில் வெளிக்குவரும் அது எந்த நாள் தெரியுமா? கர்த்தர் மீண்டும் வரும் நாள். ஓ சரியாய் சொல்லிவிட்டாயே! ஆகையால் அன்பான தம்பி, தங்கைகளே இக்கடைசி நாட்களில் தேவபக்தியின் வேஷம்போட்டு வரும் இவர்களை அடையாளம் கண்டுகொண்டு எச்சரிப்பாக இருங்கள். அவர்களை விட்டு விலகுவது நல்லது. ஏனென்றால் அவர்கள் உங்களைப் பட்சித்துவிடுவார்கள்.

**மனப்பாட வசனம்**

**“தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள்; இப்படிப்பட்டவர்களை நீ விட்டுவிலகு” – 2தீமோத்தேயு3:5**



தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்
மரம் - 18 ஆகஸ்ட் -2018 கனி - 9

ஆசிரியருரை

## இரக்கமுள்ளவர்களாயிருங்கள்
## Be Merciful



இரக்கம் இறுதிவரை ஒவ்வொருவருக்கும் இருக்கவேண்டிய ஒரு குணம். நாம் மற்றவர்களுக்கு இரங்குகிறபடி நமக்கும் இரக்கம் கிடைக்கும். இதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? இயேசு சொல்கிறார்; "உங்கள், பிதா இரக்கமுள்ளவராயிருக்கிறதுபோல, நீங்களும் இரக்கமுள்ளவர்களாயிருங்கள்" என்றார் (லூக்.6:36). சகலத்தையும் உண்டாக்கின பிதாவாகிய தேவன் இரக்கமுள்ளவராயிருக்கிறார். நல்லோர்மேலும் தீயோர்மேலும் நீதியின் சூரியனை உதிக்கப்பண்ணுகிறார். அவரை ஏற்றுக்கொள்ளுகிறவர்களுக்கு மட்டும் நன்மை செய்கிற தேவன் அல்ல. அவரை தூஷிக்கிற, அவரை ஏற்றுக்கொள்ளாத அனைவருக்குமே அவர் நன்மைசெய்கிற தேவனாயிருக்கிறார்.

ஒரு தகப்பனுக்கு ஐந்து பிள்ளைகள் என்று வைத்துக்கொள்ளுங்கள். அவர்களில் மூவர் அந்த தகப்பனுடைய சொல்லைக்கேட்டு கீழ்ப்படிந்து வாழ்ந்தாலும், கீழ்ப்படியாத மற்ற இரண்டு பிள்ளைகளுக்கும் அவர் தகப்பனாகவே இருக்கிறபடியால் அவர்களுக்கும் அந்த தகப்பன் நன்மைசெய்வான் அல்லவா? அதைப்போல பூமியில் உள்ள அனைவருக்கும் அவர் ஒரே தகப்பனாயிருக்கிறபடியால் அவர் யாவரையும் நேசித்து நன்மைகளை செய்கிறார். அவருக்கு இப்பூமியில் வேண்டாதவர்கள் என்று யாரும் இருக்கமுடியாது. பரிசேயர் பாவிகளை வெறுக்கக்கூடியவர்கள். ஆனால் ஆண்டவர் இயேசு பாவிகளை நேசிக்கக்கூடியவர். இவர் பாவிகளின்மீது கரிசனைகொண்டு அவர்களை அவர்களுடைய வியாதிகளிலிருந்து சுகமாக்கினதை பரிசேயர் கண்டு இவர் பாவிகளோடும், ஆயக்காரரோடும் போஜனம்பண்ணகிறதென்னவென்று அவருடைய சீஷர்களைப் பார்த்துக்கேட்டார்கள். இதை அறிந்த ஆண்டவர் இயேசு; "பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதேயல்லாமல் சுகமுள்ளவர்களுக்கு வேண்டியதில்லை. பலியையல்ல, இரக்கத்தையே விரும்புகிறேன் என்பதின் கருத்து இன்னதென்று போய்க் கற்றுக்கொள்ளுங்கள்; நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன் என்றார்" (மத்.9:12,13).

அநேகர் பலி, சடங்காசாரங்களில் தங்களுடைய கவனத்தை அதிகமாக செலுத்துகிறார்கள். இவைகளை செய்து விட்டால் போதும் நம்முடைய பாவங்களை கர்த்தர் என்னமாட்டார் என நினைக்கின்றனர். கர்த்தர் இரக்கத்தை விரும்புகிறார். ஆகையால் அவர் ஒரு உவமையைச் சொல்லும்போது; "ஒரு மனுஷன் எருசலேமிலிருந்து எரிகோவுக்குபோகையில் கள்ளர் கையில் அகப்பட்டான்; அவர்கள் அவன் வஸ்திரங்களை உரிந்துகொண்டு, அவனைக் காயப்படுத்தி, குற்றுயிராக விட்டுப் போனார்கள். அப்பொழுது தற்செயலாய் ஒரு ஆசாரியன் அந்த வழியே வந்து, அவனைக் கண்டு, பக்கமாய் விலகிப்போனான். அந்தப்படியே ஒரு லேவியனும் அந்த இடத்துக்கு வந்து, அவனைக் கண்டு, பக்கமாய் விலகிப்போனான். பின்பு சமாரியன் ஒருவன் பிரயாணமாய் வருகையில், அவனைக் கண்டு, மனதுருகி, கிட்ட வந்து, அவனுடைய காயங்களில் எண்ணெயும் திராட்சரசமும் வார்த்து, காயங்களைக் கட்டி, அவனைத் தன் சுயவாகனத்தின்மேல் ஏற்றி, சத்திரத்துக்குக் கொண்டுபோய், அவனைப் பராமரித்தான்" (லூக்.10:30-34). தேவனை அறிந்த ஆசாரியனும் லேவியனும் பக்கமாய் விலகிப்போனார்கள். அதுவும் அவர்கள் எந்த விதமான அலுவலாக வராமல் தற்செயலாக வந்தார்கள். அவர்களுக்கு உதவி செய்ய நேரம் இருந்தது. ஆனால் அவர்களோ குற்றுயிராக உயிருக்கு போராடிக்கொண்டிருக்கும் அந்த மனிதனைக் கண்டு விலகிப்போனார்கள். அதே வழியில் பிரயாணமாய் வந்த சமாரியன். அவன் தேவனை அறியாதவன் அவனைக் கண்டு, மனதுருகி அவனுடைய பிரயாணத்தைக்கூட எண்ணமால் அவனுக்கு இரக்கம் செய்தான். மேலும் சத்திரத்துக்கு கொண்டுபோய் பராமரித்தான். தன்னுடைய சொந்த பணத்தை செலவு செய்ய அவன் யோசிக்கவில்லை. அவனை காப்பாற்றுவதில் அவனுடைய பங்கு இருந்தது. இன்றைக்கு கர்த்தரை அறிந்திருக்கிறோம் என்று சொல்லுகிற கணக்கில்லா ஜனங்கள் இப்படியே அநேகரை பார்த்து விலகிப்போகிறார்கள். நமக்கு ஏன் வம்பு என்று நினைக்கிறார்கள். இந்தப் பூமியில் தேவன் உங்களுக்கு கொடுக்கும் சமயத்திற்கு தக்கதாக நன்மைசெய்ய நாடுங்கள். பரலோகத்திலே இந்த வேலையை நீங்கள் செய்யமுடியாது, அங்கே திருடரும் இல்லை, கொலையாளிகளும் இல்லை. கர்த்தரே நமக்கு வெளிச்சமாயிருப்பார். ஆகையால் பிதா இரக்கமுள்ளவராயிருப்பதைப்போல நீங்களும் இரக்கமுள்ளவர்களாயிருங்கள்.

மேலும், பதினாயிரம் தாலந்து கடன்பட்ட ஒருவனை குறித்து நாம் மத்.18:23-27 வசனங்களில் வாசிக்கிறோம்; "பரலோகராஜ்யம் தன் ஊழியக்காரரிடத்தில் கணக்குப் பார்க்கவேண்டுமென்றிருந்த ஒரு ராஜாவுக்கு ஒப்பாயிருக்கிறது. அவன் கணக்குப் பார்க்கத் தொடங்கினபோது, பதினாயிரம் தாலந்து கடன்பட்டவன் ஒருவனை அவனுக்கு முன்பாகக் கொண்டுவந்தார்கள். கடனைத்தீர்க்க அவனுக்கு நிர்வாகம் இல்லாதபடியால் அவனுடைய ஆண்டவன் அவனையும் அவன் பெண்ஜாதி பிள்ளைகளையும் விற்று, கடனைத் தீர்க்கும்படிக்கட்டளையிட்டான். அப்பொழுது அந்த ஊழியக்காரன் தாழ விழுந்து,



# தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்துவோம்!




## ஒருவருக்கு ஒரு நாளைக்கு குடிக்க, குளிக்க, சமைக்க, துணிகளை துவைக்க 50 லிட்டர் தண்ணீர் தேவைப்படுகிறது

✷ ஒடிசா மாநிலத்தைச் சேர்ந்த பள்ளி ஆசிரியர் ஒருவர், பணம், நகைக்கு பதில் 1001 மரக்கன்றுகளை மணமகளின் தந்தையிடம் வரசட்சனையாக கேட்டு பெற்றுக்கொண்டார்.

✷ உலகிலேயே கார் உற்பத்தியில், சென்னையை முதன்மை நகரமாக மாற்றும் முயற்சியில், தமிழக அரசு தீவிரமாக இறங்கியுள்ளது.

✷ செங்கல்பட்டில் உலகத்தரம் வாய்ந்த சர்வதேச யோகா மற்றும் இயற்கை மருத்துவ அறிவியல் மையம், 50 ஏக்கரில், 60 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும் என முதல்வர் பழனிச்சாமி அறிவித்தார். **நடப்புச் செய்திகள்**

## ஒரு கோதுமை விதை

A Grain of Wheat

ஒரு கோதுமை விதை சாகாவிட்டால்,
அது ஒரு தனி விதையாக, தனிமையில் நிலைத்திருக்கும்,
நாம் நமது சுயத்தை சாகடிக்காவிட்டால்,
நாம் நமது கர்த்தருடைய அறுவடை விதையாக இருக்கமுடியாது.

அவர் ஜீவித்தார், அவர் நேசித்தார்,
நமக்காக எல்லாவற்றையும் கொடுத்தார்
ஆகவே அவர் தம்மையே "தானியத்தின் விதையாக" விதைத்தார்,
அவருக்காக, நமக்கு அறுவடை வருகிறது,
மரணம் மரிப்பதற்காகவும் ஜீவன் ஜெநிப்பதற்காகவும்.

இயேசு தம்மைப் பின்பற்ற துரிதப்படுத்துகிறார்,
நிலைத்திருந்து, அதிக கனிகளைக் கொடுக்க,
நாம் கல்வாரியை அனுபவிக்கத் தேவையில்லை
நாம் விதை விதைக்க வேண்டியதே அவசியம்.

*- Calton Elkins* ***(TVOTI)***

## இவ்விதழின் ஆசிரியர் அறிக்கை...



'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்' மாத இதழின் வாசகர் கருத்தரங்கினை தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் நடத்தி, கிறிஸ்துவின் வசனம் நிறைந்த மாத இதழை அறிமுகப்படுத்த வேண்டும் என்ற சிந்தையோடு 2001 –ம் ஆண்டு முதல் பயணத்தை நாகர்கோவில் கிறிஸ்துவின் சபையார் கூடுமிடத்தில் துவக்கி 2008 ம் ஆண்டு 32 வது மாவட்டமாக திருப்பூர் மாவட்டத்தில் நிறைவு செய்தோம். இதன் பயனாக அநேகருக்கு கிறிஸ்துவின் வசனத்தை அறிமுகப்படுத்தி எல்லா மாவட்டங்களிலும் வாசகர்களைப் பெற்றோம்.

அப்போஸ்தலனாகிய பவுல் ஆசிய முழுமைக்கும் சுவிசேஷத்தை அறிவிக்க மூன்று முறை பயணம் செய்தார். நாங்கள் இரண்டாம் முறை எங்கள் பணத்தை துவக்க பெலவீனமாக இருந்தோம். அப்பொழுது கிறிஸ்துவுக்குள் எங்களுக்கு கிடைத்த அன்பு சகோதரி பெட்டியோடு இது விஷயமாக பகிர்ந்து கொண்டபோது இரண்டாவது பயணத்தை துவக்குங்கள் என்று சொல்லி எங்களை உற்சாகப் படுத்தினார்கள்.

அவ்வண்ணமே எங்களது இரண்டாவது பயணத்தை துவக்கி வாசகர்கள் இடத்திலேயே கூட்டங்களை நடத்த திட்டமிட்டு 2016 ஜனவரியில் தூத்துக்குடியில் துவக்கி 32 வது மாவட்டமாக சிவகங்கையில் இரண்டு வாசகர்களோடு நிறைவு செய்தோம். 6 லட்சம் இஸ்ரவேலர் எகிப்தை விட்டு புறப்பட்டு கானானுக்குள் பிரவேசித்த போது அதில் புறப்பட்டவர்களில் இரண்டுபேர் மட்டுமே சென்றார்கள் என வாசிக்கிறோம். அதைப்போல இரண்டாவது சந்திப்பில் இரண்டு வாசகர்களை சந்தித்தோம். உண்மையில் கிறிஸ்துவுக்கு மகிமையாக அந்த சிவகங்கை மாவட்டத்தில் வேதாகமத்தின் முத்தாக எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல் எங்களை கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் ஏற்றுக்கொண்டு, உபசரித்த அந்த இரண்டு வாசகர்களை எங்களால் மறக்க முடியாது. அவர்கள் கிறிஸ்துவுக்காக வாழ்ந்து பரலோக நித்திய வாழ்வை பெறவேண்டும். அதுவே எங்களுடைய ஜெபமாகும்.

32 மாவட்டத்திலும் இரண்டு முறை கால் மிதித்து கர்த்தருடைய வசனத்தை பிரசங்கிக்க கொடுத்த தேவனுக்கு மகிமை உண்டாவதாக!

அன்புடன்,
உங்கள் சகோதரன்



வணங்கி ஆண்டவனே! என்னிடத்தில் பொறுமையாயிரும், எல்லாவற்றையும் உமக்குக் கொடுத்துத் தீர்க்கிறேன் என்றான். அந்த ஊழிக்காரனுடைய ஆண்டவன் மனதிரங்கி, அவனை விடுதலைபண்ணி, கடனையும் அவனுக்கு மன்னித்துவிட்டான்" (மத்.18:23-27). கர்த்தர் மன்னிக்க தயைபெருத்தவர். ஆகையால் ஆண்டவர் இயேசு சொல்லுகிற உவமைகளில் மன்னிப்பைப் பற்றி அதிகமாக எடுத்துச்சொல்லுகிறார்.

ஆண்டவர் மலைப்பிரசங்கத்தில் சொல்லும்போதுகூட "இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் இரக்கம் பெறுவார்கள் என்றார்" (மத்.5:7). நாம் மற்றவர்களுக்கு இரக்கம் செய்யும்போது நமக்கும் இரக்கம் கிடைக்கும். "ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன்கொடுக்கிறான்; அவன் கொடுத்ததை அவர் திரும்பக் கொடுப்பார்" எனக் காண்கிறோம் (நீதி.19:17). அவன் ஏழையாய் பிறந்தது யார்செய்த பாவமோ என்று சொல்லி, அநேகர் ஏழையை தூஷிக்கவும், துன்பப்படுத்தவும் செய்கிறார்கள். ஏழைக்கு நாம் உதவும்போது அது தேவனுக்கு கடன் கொடுப்பதைப்போன்றது. தேவனிடத்தில் கொடுத்ததை அவர் திரும்பகொடுக்காமல் இருப்பாரா? மனிதன் வேண்டுமானால் ஏமாற்றுவான். ஆனால் பிதாவாகிய தேவன் பன்மடங்காக உங்களுக்கு அவைகளை திரும்பகொடுப்பார். அப்போஸ்தலனாகிய பவுல் தன்னைக்குறித்து சொல்லும்போது; "முன்னே நான் தூஷிக்கிறவனும், துன்பப்படுத்துகிறவனுமாயிருந்தேன்; அப்படியிருந்தும், நான் அறியாமல் அவிசுவாசத்தினாலே அப்படிச் செய்தபடியினால் இரக்கம் பெற்றேன்" என்கிறார் (1தீமோ.1:13). அறியாமல் செய்கிற காரியங்களை கர்த்தர் மன்னிக்கிறார். அறிந்து செய்கிறவர்களுக்கு அநேக அடிகள் அடிக்கப்படும். பவுல் அறியாமல் செய்தபடியால் அவர் தேவனிடத்தில் இரக்கம் பெற்றார் எனக் காண்கிறோம். இப்படி இரக்கம் பெற்றவர்கள் "தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக இருந்து, இரவும் பகலும் அவருடைய ஆலயத்திலே அவரைச் சேவிக்கிறார்கள்; சிங்காசனத்தின்மேல் விற்றிருக்கிறவர் இவர்களுக்குள்ளே வாசமாயிருப்பார். இவர்கள் இனி பசியடைவதுமில்லை, இனி தாகமடைவது மில்லை; வெயிலாவது உஷ்ணமாவது இவர்கள்மேல்படுவதுமில்லை. சிங்காசனத்தின் மத்தியிலிருக்கிற ஆட்டுக்குட்டியானவரே இவர்களை மேய்த்து, இவர்களை ஜீவதண்ணீருள்ள ஊற்றுகளண்டைக்கு நடத்துவார்; தேவன்தாமே இவர்களுடைய கண்ணீர்யாவையும் துடைப்பார்" (வெளி.7:15-17). பூமியிலே இரக்கமாயிருந்தால் நமக்கு என்ன கிடைக்கப்போகிறது என்று நினைப்பவர்கள் இங்கே கவனிக்கவேண்டுகிறேன். அவர்களுக்கு கர்த்தர் இரங்கி இரக்கத்தின் ஐசுவரியமாகிய நித்திய வாழ்க்கையை கொடுப்பார். அங்கே கவலையில்லை, கண்ணீர் இல்லை, துக்கமில்லை, என்று காண்கிறோம். நீங்கள் பூமியிலே இரக்கமுள்ளவர்களாயிருக்கும்போது உங்களுக்கும் கர்த்தர் இரங்கி இவைகளை செய்வார். பின் நாளில் நடப்பதை யார் பார்த்தது என்று மெத்தனமாக இருப்பீர்கள் என்றால் இன்றே உங்களுடைய தீர்மானத்தை மறு ஆய்வு செய்யுங்கள்.

"ஏனென்றால், இரக்கஞ்செய்யாதவனுக்கு இரக்கமில்லாத நியாயத்தீர்ப்புக்

கிடைக்கும்; நியாயத்தீர்ப்புக்கு முன்பாக இரக்கம் மேன்மைபாராட்டும்" என காண்கிறோம் (யாக்.2:13). தேவனுடைய சித்தத்தின்படி ஜீவிக்காத ஜனங்களைப் பார்த்து அக்கிரம செய்கைக்காரர்களே என்னைவிட்டு அகன்றுபோங்கள் என்று சொல்லி உங்களை அறியேன் என்பார். பிதா இரக்கமுள்ளவராயிருப்பதைப்போல நீங்கள் இரக்கமுள்ளவர்களாயிருக்கும்போது உங்களுக்கும் இரக்கம் கிடைக்கும். இரக்கமில்லாதவர்களுக்கு இரக்கமில்லாத தீர்ப்பு கிடைக்கும் நியாயத்தீர்ப்பு நாளிலே இரக்கம் மேன்மைபாராட்டும். ஐயோ, நான் இரக்கமில்லாமல் வாழ்ந்தேனே என்று அந்நாட்களில் புலம்பினாலும், அழுதாலும் இரக்கம் நம் முன்பாக மேன்மை பாராட்டும். நாம் தியானித்தபடி பதினாயிரம் தாலந்து கடன்பட்டவன் மன்னிப்பை பெற்றான். அவனோ அந்த மன்னிப்பை தன்னிடத்தில் கடன்பட்டவனுக்கு காட்டாமல் அவனை "பிடித்து தொண்டையை நெரித்து நீ பட்ட கடனை எனக்குச் கொடுத்துத் தீர்க்கவேண்டும் என்றான். அப்பொழுது அவனுடைய உடன் வேலைக்காரன் அவன் காலிலே விழுந்து என்னிடத்தில் பொறுமையாயிரும், எல்லாவற்றையும் உமக்குக் கொடுத்துத் தீர்க்கிறேன் என்று, அவனை வேண்டிக்கொண்டான். அவனோ சம்மதியாமல், போய் அவன் பட்ட கடனைக் கொடுத்துத் தீர்க்குமளவும் அவனைக் காவலில் போடுவித்தான்" (மத்.18:28-30). கடன்கள் மன்னிக்கப்பட்ட ஒரு கடனாளி மற்றவனுக்கு செய்த தீர்ப்பைப் பார்த்தீர்களா? நாம் மற்றவர்கள் செய்த தப்பிதங்களை மன்னிக்கா திருக்கும்போது நம்முடைய தப்பிதங்களையும் கர்த்தர் மன்னிக்கமாட்டார் என்பதை நாம் அறியவேண்டும்.

ஆகையால், "இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது" என்கிறார் (வெளி.22:12). எல்லாவற்றையும் தேவன் நியாயத்திலே கொண்டு வந்து நிறுத்துவார். அவனவன் செய்த நன்மையின்படியே தக்கபலனை கர்த்தருடைய சமூகத்தில் பெற்றுக்கொள்வான். இதில் பட்சபாதம் ஒன்றும் கிடையாது. ஐயோ, நான் போதகருடைய மகன், அல்லது நான் மூப்பருடைய குமாரத்தி, என்னுடைய சொத்தையெல்லாம் கர்த்தருடைய ஊழியத்திற்கு கொடுத்திருக்கிறோம். இந்த ஏழைக்கு நீர் இரங்கி இருக்கிறீர் எங்களுக்கு இரக்கம் செய்யவேண்டும். நாங்கள் குடும்பத்தோடு பரலோகத்தில் இருக்க இடத்தை கொடுக்கவேண்டும் என்று நியாயத்தீர்ப்பில் ஒருவரும் அவருக்கு முன்பாக பேசிவிட முடியாது. ஐசுவரியவான் தரித்திரன் சம்பவத்தில் "பாதாளத்தில் அவன் வேதனைப் படுகிறபோது, தன் கண்களை ஏறெடுத்து, தூரத்திலே ஆபிரகாமையும் அவன் மடியிலே லாசருவையும் கண்டான். அப்பொழுது அவன்: தகப்பனாகிய ஆபிரகாமே, நீர் எனக்கு இரங்கி, லாசரு தன் விரலின் நுனியைத் தண்ணீரில் தோய்த்து, என் நாவைக் குளிரப்பண்ணும்படி அவனை அனுப்பவேண்டும்; இந்த அக்கினிஜுவாலையில் வேதனைப்படுகிறேனே என்று கூப்பிட்டான். அதற்கு ஆபிரகாம்: மகனே, நீ பூமியிலே உயிரோடிருக்குங் காலத்தில் உன் நன்மைகளை அனுபவித்தாய், லாசருவும் அப்படியே தீமைகளை அநுபவித்தான், அதை



கிருபையினால் நாங்கள் உலகத்திலேயும், விசேஷமாக உங்களிடத்திலேயும் கபடமில்லாமல் திவ்விய உண்மையோடே நடந்தோமென்று.." சொன்னார் (2கொரி.1;12). இந்த விதமாக நாம் நம்முடைய நண்பர்கள் மத்தியில் நடந்துகொள்ள விருப்பம் கொள்ள வேண்டும்.

நாம் நம்முடைய முந்தைய பாடத்தில் நல்மாதிரியாக இருப்பதைக் குறித்து பேசினோம். இது மிகவும் முக்கியம் ஏனென்றால் நாம் எப்படி வாழ்கிறோம் என்பதை நம் நண்பர்கள் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நம்முடைய மாதிரியான ஜீவியத்தின் மூலம் அவர்கள் கற்றுக் கொள்கிறார்கள் என்பதையும் நாம் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. கிறிஸ்து நம்மில் வாழ்வதை அவர்கள் காணும்போது அவர்கள் நம்மைப் போல வாழவும் தேவனைத் தேடவும் வாஞ்சிப்பார்கள். "இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது" (மத்.5:6). நாம் இதைச் செய்ய ஆயத்தமாயிருக்கவேண்டியது அவசியம்!

**தொடர்புடைய இவ் வேதவாக்கியங்களைப் படித்து விவாதியுங்கள்:**

நீதி.18:24, மத்.5:16, லூக்.16:9, அப்.17:11, 1கொரி.3:6-7, 2கொரி.1:12, 1பேது.1:23,3:15

## வேதாகம ஆய்வு...

**அகசியா** (யேகோவா பிடித்தார்)
**Ahaziah** (கி.மு.89-895)

1. இஸ்ரவேலின் 8 ம் ராஜா ஆகாபுக்கும், யேசபேலுக்கும் பிறந்த மகன். இவன் விக்கிரகாராதனைக்காரன். இவன் ஜன்னல் வழியாய் விழுந்து காயப்பட்டபொழுது, பாகால் சேபூபிடம் விசாரிக்க ஒரு ஆளை அனுப்பினான். எலியா அந்த ஆளைச் சந்தித்து அவனைக் கண்டித்து, ராஜா மரித்துப் போவான் என்று சொன்னான் (1இரா.22:40,51:2, 2இரா.1:2, 2 நாளா.20:35)

2. அகசியா: யூதாவின் ஆறாம் ராஜா. இவனுடைய மறுபெயர் யோவாகாஸ் (2நாளா.21:17,22:1,25:23) யோராமும், அத்தாலியாளும் இவனுடைய பெற்றார் (2இரா.8:26) இவனும் இவனுடைய மாமன் இஸ்ரவேல் ராஜா யோராமும் சீரிய ராஜாவோடு யுத்தம் பண்ணப்போய் தோல்வியடைந்தார்கள்.

இவன் மெகிதோவுக்கு ஓடிப்போய்ச் செத்தான் (2இராஜா.9:27).

இவன் சகோதரி யோசேபாள் இவனுடைய மகனாகிய யோவாசை களவாய் எடுத்தாள்.

**பொது அறிவு சோதனை**

1. சிவப்பு கோள் என்பது எது?
   அ)செவ்வாய் ஆ)வியாழன் இ)நெப்டியூன்
2. இரத்தத்தில் உள்ள கழிவுப் பொருட்களை நீக்குவது எது?
   அ)இதயம் ஆ)சிறுநீரகம் இ)கல்லீரல்
3. கடல் நீரின் இறக்கம் ஏற்றம் ஒரு நாளுக்கு இருமுறை ஏற்படக் காரணம் என்ன?
   அ)பூமி சூரியனை சுற்றுவதால் ஆ)நட்சத்திரங்கள் தன்னைத்தானே சுற்றுவதால் இ)பூமி தன்னைத்தானே சுற்றுவதால்
4. இந்திய இலக்கியத்திற்கு வழங்கப்படும் உயர்ந்த விருது?
   அ)ஞானபீட விருது ஆ)அர்ச்சுனா விருது இ)பாரத ரத்னா விருது
5. கல்பாக்கத்தில் உள்ள அணுமின் நிலையத்திற்கு யாருடைய பெயர் சூட்டப்பட்டுள்ளது? அ)வ.உ.சிதம்பரனார் ஆ)இந்திராகாந்தி இ)எம்.ஜி.ஆர்

**விடைகள்:1.செவ்வாய் 2.சிறுநீரகம் 3.பூமி தன்னைத்தானே சுற்றுவதால் 4.ஞானபீட விருது 5.இந்திராகாந்தி**

**இதை நாம் எவ்வாறு பிரயோகிக்கிறோம்?**

தேவனுக்கென்று பயன்படுத்தும்படி நாம் இருவகையாக நேரத்தைக் கொண்டுள்ளோம் என்பதை கருத்தில் கொள்ள வேண்டும். நாம் நமக்கான நேரத்தைக் கொண்டுள்ளோம் மேலும் நம் நண்பர்களுக்கான நேரத்தைக் கொண்டுள்ளோம். பவுல் தீமோத்தேயுவிடம் "நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்து போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு" (2தீமோ.2:15) என்று சொன்னார்.

தேவனுடைய வார்த்தையைப் படிக்கையில் நமது அநுபவங்களை தேவனுடைய போதனையோடு இணைக்க நமக்கு உதவிசெய்யும். நம்முடைய வாழ்வைப் பற்றி நினைக்கும்போது நம்மை விசாரித்து கேட்கும் யாவருக்கும் பதிலளிக்கும்படி எப்போதும் வேதவாக்கிய ஆயத்தத்தோடு இருக்கின்றவர்களாக நமக்கு சாதகமாக்கிக் கொள்ள இயலாதபடி ஓர் சந்தர்ப்பம் உண்டாயிராமல் இயேசு அதனைக் குறித்து சிந்தித்த வண்ணமாக நினைக்க முடியும். இது ஒருநாள் இரவில் நடைபெறுபவையல்ல, ஆனால் அது நடைபெறும், நண்பர்கள் தங்களுடைய பிரச்சனையைப் பற்றி பேசும்போது வேதாகமத்தைக் குறித்து நீங்களாகவே சிந்தித்துப் பார்க்கும் அறிவைக் கண்டு கொள்ளுவீர்கள்.

இங்கே நமது மனப்பாங்கு மிக முக்கியமானது. நமது விருப்பம் கண்டனம் பண்ணும், நிந்திக்கும் அல்லது தண்டிக்கும் கருவியைப் போல வேதவாக்கியத்தைப் பயன்படுத்துகிறதாய் இல்லாமல், ஆனால் அன்பு செய்யக்கூடிய, பராமரிக்கக்கூடிய மற்றும் உதவக்கூடிய ஒரு கருவியாக இருக்கிறது. நமது நண்பர்கள் தங்களுடைய தவறான வாழ்க்கையைச் சரிசெய்து கொள்ள ஒத்துக் கொள்ளுவதற்கு முன் அவர்கள் நாம் அவர்களிடத்தில் அன்பு கூர்ந்து அவர்களை இக்காரியத்தில் அக்கறை கொள்கிறோம் என்பதை முதலாவது அவர்கள் அறிய வேண்டியது அவசியம். நாம் ஒவ்வொருவரையும் மரியாதையுடன் நடத்த வேண்டும். 1பேது 2:17, "எல்லாரையும் கனம்பண்ணுங்கள்" என்கிறது. நம்முடைய நண்பர்கள் தேவசாயலில் உருவாக்கப்பட்டுள்ளனர், நம்மைப் போன்றவர்கள், மேலும் அதினிமித்தம் நம்முடைய அன்பிற்கும் கனத்திற்கும் உரியவர்கள் (ஆதி.1:27, மத்.22:39). வேதாகமம் தேவனுடைய வார்த்தை, இது இல்லாமல் அவர்கள் இரட்சிக்கப்பட முடியாது, ஆனால் தேவன் நம்மிடத்தில் எதிர்பார்க்கிறதற்கேற்றார் போல் நாம் தேவனுடைய வார்த்தையைப் பயன்படுத்தவேண்டும். வேதாகமத்தை படிப்பதன் மூலம் இந்நோக்கங்களை கண்டுகொள்ளவும் புரிந்துகொள்ளவும் வேதாகமம் நமக்கு உதவுகிறது.

நாம் நம்முடைய நண்பர்கள் மேல் கொண்டுள்ள கரிசனத்தை வெளிப்படுத்துவதில் உறுதியுடனிருக்கவும் வேண்டும். மக்கள் நாம் உண்மையாக இருக்கும்போதும் உள் நோக்கிற்காக தவறாக இருப்பதையும் அறிவார்கள். நாம் சரியான நோக்கத்தினைக் கொண்டிருக்கும்போது நாம் உறுதியுடனிருப்போம். நம் நண்பர்கள் செய்ய தீர்மானித்திருக்கிறவற்றில் அவர்கள் மேல் தன்னலமற்ற அன்பு கூருவதே சரியான நோக்கமாகும். சரியான நோக்கத்தினையும் உண்மையான எண்ணத்தினையும் கொண்டிருப்பதன் மூலம் நம் நண்பர்கள் மேல் நாம் கொண்டுள்ள அக்கறையினை வெளிப்படுத்துவதில் உறுதியுடனிருப்போம். பவுல் இவ்வுலகில் தான் நடந்து கொண்டவகையை "மாம்சத்திற்கேற்ற ஞானத்தோடே நடவாமல், தேவனுடைய



நினைத்துக்கொள்; இப்பொழுது அவன் தேற்றப்படுகிறான், நீயோ வேதனைப்படுகிறாய். அதுவுமல்லாமல், இவ்விடத்திலிருந்து உங்களிடத்திற்குக் கடந்துபோகவும், அவ்விடத்திலிருந்து எங்களிடத்திற்குக் கடந்துவரவும் மனதுள்ளவர்களுக்குக் கூடாதபடிக்கு, எங்களுக்கும் உங்களுக்கும் நடுவே பெரும்பிளப்பு உண்டாக்கப்பட்டிருக்கிறது என்றான்" (லூக்.16:23-26). லாசரு ஐசுரியவானுடைய வாசலருகே கிடக்கும்போது ஐசுரியவான் காணாதவனாயிருந்தான். மரித்து ஆபிரகாமுடைய மடியிலே இருப்பதைப்பார்த்து விரல் நுனியிலே தண்ணீரை நனைத்து என் நாவைக்குளிரப்பண்ணும் என்று ஆபிரகாமைப்பார்த்து கேட்கிறான். அன்று இரக்கம் செய்யாத ஐசுவரியவான் இரக்கத்திற்கு காத்திருக்கிறான் ஆனால் அவனுக்கு இரக்கம் கிடைக்கவில்லை. இதுவே இரக்கமில்லாதவர்களுக்கு கிடைக்கும் தீர்ப்பாயிருக்கும். ஆகையால் இரக்கம் செய்ய நாடுங்கள். அப்பொழுது இரக்கம் பெறுவீர்கள்.

**கர்த்தருடைய இரக்கம் எப்படியிருக்கும்?**

கர்த்தருடைய இரக்கத்தைக் குறித்து நாம் ஒன்று குறை சொல்லிவிடமுடியாது. அதற்காக நாம் பரிந்துபேசவும் முடியாது. ஏனென்றால்; "அப்படியே, யாக்கோபைச் சிநேகித்து, ஏசாவை வெறுத்தேன் என்றும் எழுதியிருக்கிறது. ஆகையால் நாம் என்ன சொல்லுவோம்? தேவனிடத்திலே அநீதி உண்டென்று சொல்லலாமா? சொல்லக்கூடாதே. அவர் மோசேயை நோக்கி: எவன்மேல் இரக்கமாயிருக்கச் சித்தமாயிருப்பேனோ அவன்மேல் இரக்கமாயிருப்பேன், எவன்மேல் உருக்கமாயிருக்கச் சித்தமாயிருப்பேனோ அவன்மேல் உருக்கமாயிருப்பேன் என்றார். ஆகையால் விரும்புகிறவனாலும் அல்ல, ஓடுகிறவனாலும் அல்ல, இரங்குகிற தேவனாலேயாம்" (ரோம.9:13-16). நமக்கு சிலரை பிடிப்பதில்லை. ஆனால் கர்த்தருக்கு அவர்களைப் பிடிக்கும். அவர்கள் நம்முடைய பார்வைக்கு தகாதவர்கள் போலிருக்கலாம். ஆனால் அவர்கள் கர்த்தருடைய பார்வையில் சிறப்பானவர்கள். ஆகையால் அவர்களுக்கு அவர் இரக்கம் செய்வார். இதைத்தான் யாக்கோபு ஏசா சம்பவத்தில் பார்க்கிறோம். தேவனிடத்திலே அநீதி உண்டென்று சொல்லலாமா? பயற்றங்கூழை கொடுத்து சேஷ்டபுத்திரபாகத்தை யாக்கோபு எழுதி வாங்கிவிட்டான். அவன் சரியானவன் என்று அவன்மேல் இரக்கமாயிருக்கச் சித்தமாயிருக்கிறார். அது அவருடைய விருப்பமாயிருக்கிறது. ஆகையால் கர்த்தருடைய இரக்கத்தைப் பெற காத்திருங்கள்.

**ஜெபியுங்கள்**

- வேதாகம பள்ளிக்காக...
- மாத இதழுக்காக...
- தமிழகத்தில் கர்த்தருடைய நாமம் மகிமைப்படும்படியாக...
- கர்த்தருடைய ஊழியத்திற்கு அநேகர் ஒப்புக்கொடுக்க...
- ஊருக்கு ஒரு கிறிஸ்துவின் சபை உருவாக...



# பழைய மனிதனின் பாவம் களையப்படுதல்

## Putting Off The Old Man of Sin

-J.C.Choate




ஒருவன் இன்னொருவனிடமிருந்து திருடுகிறவன் அல்லது ஒரு திருடனாயிருப்பவன், அவன் தனக்குரியதல்லாத ஒன்றை எடுத்துக்கொள்ளுகிறவனாயிருக்கிறான். அவன் ஒரு சோம்பேறி, தன்னுடைய வாழ்வுக்கென்று வேலை செய்ய விரும்பாதவனும் அல்லது தான் வைத்துக்கொள்ள விரும்பும் பொருட்களை வாங்குவதற்கென்று சம்பாதிக்க விரும்பாதவனுமாயிருக்கிறான். "உன்னுடையதை நான் எடுத்துக்கொள்ள முடியுமானால் உன்னுடையது எதுவோ அது என்னுடையது" என்பதே அவனுடைய தத்துவமாகும் மற்றவர்களை விட மோசமாக இது தங்களுக்குத் தேவையான அல்லது பணக்காரர்களிடம் எதை எடுத்துக் கொண்டால் அது அவர்களுக்கு வேதனையளிக்குமோ அதையும் செய்ய பல காரணங்களை சொல்லுவார்கள். ஆனால் குறிப்பு என்னவென்றால், இது திருடனுக்குரியதல்ல ஆனபடியினால் இது மோசமான காரியம் அல்லது தவறானது. மேலும் நாட்டின் சட்டத்திற்கும், எல்லாவற்றிற்கும் மேலாக அவன் பின்பற்றக்கூடிய தேவனுடைய சட்டத்திற்கும் விரோதமானது. திருடுதல் என்பது இன்று மிக மோசமானது. எல்லாவித களவுகளும் காணப்படுகின்றன. இப்படிப்பட்டவைகள் தினமும் செய்திகளில் வெளிவருகிறது. மற்றவர்களை அடித்து அவர்களிடமிருப்பதை எடுத்துக்கொள்ள எல்லாவிதமான சதிகளும் செய்யப்படுகிறது. மேலும் இது களவு செய்தல் மற்றும் திருடுதல் போன்றவற்றைக் காட்டிலும் குறைவானதல்ல. அரசாங்கத்திற்கு வரி செலுத்துவதில் ஏமாற்றுகிறவனையும் தங்களுடைய வேலைக்காரர்களுக்கு நேர்மையான ஒரு நாளின் வேலைக்குரிய ஒரு நாள் சம்பளத்தைக் கொடுக்காமல் ஏமாற்றுகிறவனையும் பற்றி சிந்தித்துப் பாருங்கள்.

ஆனபடியால், திருடுதல் என்பது தவறானது மேலும் இவ்வாறு செய்வதில் ஒத்துப்போக ஒரு வழியைப் பின்பற்றுவதும் தவறானது. எனவே இந்த பாவத்தினிமித்தம் மனந்திரும்புவதற்கு குற்ற உணர்வு தேவையாயிருக்கிறது. அப்போஸ்தலனாகிய பவுல் "திருடுகிறவன் இனித் திருடாமல் குறைச்சலுள்ளவனுக்குக் கொடுக்கத்தக்கதாகத் தனக்கு உண்டாயிருக்கும்படி, தன் கைகளினால் நலமான வேலை செய்து, பிரயாசப்படக்கடவன்" என்று எபே.4:28 ல் சொல்லுகிறார். இதுதான் இதற்கு விடை. திருடுதலை விட்டு விட்டு வேலைக்குச் செல்லுங்கள். மேலும் மற்றவர்களிடமிருந்து எடுத்துக் கொள்வதற்கு பதிலாக, உங்களுடைய சொந்த தேவைக்கென்று போதுமான சம்பளத்தைச் சம்பாதிக்கும்படிக்கு கவனமாயிருங்கள். அதன்பின் தேவையிலிருக்கும் மற்றவர்களுக்கு பகிர்ந்து கொடுக்கத்தக்க தேவையான பணத்தைப் பெற்றிருப்பீர்கள். இதுதான் உண்மையான மனந்திரும்புதல்.

ஆனால் இது எதுவாக இந்தபோதிலும் களவு செய்தல் அல்லது திருடுதல் போன்றவைகளை வகைப்படுத்த முடியாதபடி பல காரியங்கள் செய்யப்பட்டாயிற்று. நீங்கள் இப்பேர்பட்ட சிலகாரியங்களை செய்துகொண்டிருப்பீர்களென்றால் பின்பு நிச்சயமாக நீங்கள் இதைப்பற்றி அறிந்து கொள்வீர்கள். ஆனால் நீங்கள் களவு செய்கிறவர் என்றோ அல்லது திருடன் என்றோ அழைக்கப்பட விரும்பமாட்டீர்கள் தானே? இவைகளைச்



# நமது நண்பர்களுக்கு சுவிசேஷம் அறிவித்தல்

## Evangelizing Our Friends

-TVOTI



**தேவனை அறிய சரியான ஆயத்தம் உன் நண்பனுக்கு உதவுகிறது**

**பாடம் -5**

Proper Preparation Helps Your friends To Know God

- சென்ற மாத இதழின் தொடர்ச்சி

நாம் உரையாடலை எளிதாக்கும் ஒரு வழியில் நம்முடைய நண்பர்களோடு பேசவும் முடியும் நமது நண்பர்கள் ஆவிக்குரிய தேவைகளில் அதை உணர்ந்தார்களோ இல்லையோவென இருக்கின்றனர். அவ்வகையான ஆவிக்குரிய தேவைகளை புரிந்து கொள்வது சிலவேளைகளில் நமக்குக் கடினமாக இருக்கிறது. ஆனால் ஒவ்வொரு பாவப்பிரச்சனையை கொண்டிருக்கிறோம். மேலும் பாவம் நம்முடைய வாழ்வில் பல பிரச்சனைகளை உருவாக்குகிறது என்பதையும் கூட நினைத்துப் பார்க்கவேண்டும் (ரோம.2:23) அதிகமான வேளையில் நமது நண்பர்கள் இந்தப் பிரச்சனையைக் குறித்து விவாதிக்க விரும்பமாட்டார்கள் ஏனென்றால் இந்த விதமான பிரச்சனைகள் தங்கள் வாழ்வில் இருக்கிறதென்று மனக்குழப்பமடைவார்கள். அவர்கள் ஒவ்வொருவரையும் சந்தோஷமாக, போட்டிபோட்டுக்கொண்டு பிரச்சனையே இல்லாதவர்களாக காண்பிக்கவே விரும்புகிறார்கள். இவையெல்லாம் இருக்கிறதென்று அவர்கள் கூறினாலும் கூட கிறிஸ்தவராயில்லாத ஒருவரிடம் இது ஒருபோதும் உண்மையாயிருக்காது. இதற்கு மேலாக நாம் எப்படியாகிலும் நம்முடைய நண்பர்களை அவர்களது பிரச்சனைகளைப் பற்றி பேச கட்டாயப்படுத்த முடியாது அல்லது கட்டாயப்படுத்தி அவர்களை மாற்றவும் முடியாது. நாம் பொறுமையோடும் அன்போடும் நம் நண்பர்களை அக்கறையோடு கவனித்துக்கொள்ள வேண்டும், அவர்கள் ஆயத்தமாகும் போது நம்மோடுகூட தேவனுடைய வார்த்தையை பற்றி விவாதிக்க விருப்பம் கொள்வார்கள். நாம் அவர்கள் மீதும் அவர்கள் வாழ்க்கையின் மீதும் அக்கறையுள்ளவர்களாக இருக்கிறோம் என்பதை அறியும்போது, தேவன் அவர்களோடு தேவனைப் பற்றி பேசுவதற்கான தருணத்தை நாமக்கு உருவாக்கிக் கொடுப்பார். நினைவில் கொள்ளுங்கள், நம்முடைய வேலை நடுவதும் தண்ணீர் பாய்ச்சுவதும், ஆனால் தேவன் அதைவிளையச் செய்கிறார் (1கொரி.3:6,7).

**<u>ஆய்வுக்கு</u>**

**உனது நண்பர்களோடு கலாச்சார கேள்விகள் பற்றி பேச முயன்றுள்ளீர்களா?**

**உனது நண்பர்ளோடு வேதாகமக் கேள்விகள் குறித்துப் பேச முயன்றுள்ளீர்களா?**

**இல்லையென்றால, நட்பை இழப்பதற்கு இதுவே காரணமென்ற கவலை உள்ளதா?**

**நீங்கள் எப்படி இந்த உரையாடலைத் தொடங்கவேண்டுமென அறியாதவர்காளாய் இருக்கிறீர்களா?**



## எவ்வாறு ஞாயிறு ஆராதனையில் கலந்துகொள்வது

## *How to Attend Sunday Worship*

இந்த விஷயத்தில் நீங்கள் ஏற்கனவே வல்லுநனராக இருப்பீர்கள், ஆனால் இவ்விஷயத்தில் அதிகப்படியான சில குறிப்புகள் உங்களுக்குத் தேவை, தயவுசெய்து சரியான முறையில் ஆராதிக்க நமக்கு உதவுகின்ற பின்வரும் தகவல்களை காண்போம்:

**1. சனிக்கிழமை மாலை சீக்கிரமாக படுக்கைக்குச் சென்று ஞாயிற்றுக் கிழமையில் சீக்கிரமாய் படுக்கையை விட்டு எழும்புங்கள்.** நான்றாக ஓய்வெடுத்துக்கொள்ளுங்கள். ஆராதனைக்கு தூங்கி வழிந்துகொண்டு செல்லாதீர்கள்.

**2. சபை கூடுகைக்குச் சீக்கிரமாக வாருங்கள்.** கடைசி நிமிடம் வரை காத்துக்கொண்டு இராதீர்கள். உங்களுடைய வருகை ஒழுங்குபடுத்துவதற்கும், வழி காட்டுவதற்கும், ஏற்பாடுகள் செய்வதற்கும் இன்னும் இதுபோன்ற காரியங்களுக்கும் தேவையாயிருக்கிறது. நீங்கள் வழியில் செல்லுகின்ற புதியவரை நிறுத்தி அழைத்து வருகிறவராக இருக்கலாம்.

**3. நீங்கள் உங்களுடைய வேதாகமம், பேனா, பேப்பர் மற்றும் குறிப்பேடுகளையும் கொண்டுவாருங்கள்.** செய்தி நேரத்தில் அல்லது வேதபாடநேரத்தில் குறிப்புகள் எடுத்து அவைகளை எதிர்கால நலனுக்காக நேர்த்தியாக வரிசைப்படுத்திக் கொள்ளுங்கள்.

**4. ஊழியத்தில் பங்குகொள்ளுங்கள்.** பாடுங்கள், ஜெபியுங்கள், ஏற்றவேளையில் வினா எழுப்புங்கள் மேலும் ஏகசிந்தையுடன் ஒத்துக்கொள்ளும்போது இருதயத்தின் ஆழத்திலிருந்து “ஆமென்” என்று சொல்லுங்கள்.

**5. விருந்தினர்களை சந்தியுங்கள்.** உங்களை அறிமுகப்படுத்தி அவர்கள் உங்களை சந்தோஷமாக ஏற்றுக்கொள்ளும் மனநிலையை ஏற்படுத்துங்கள். அவர்கள் வேதத்தை அறியாதவர்களாயிருந்தால் உங்களுடைய வேத அறிவினைப் அவர்களோடு பகிர்ந்து கொண்டு வேதவசனங்களை அவர்கள் கண்டுகொள்ளும்படி செய்யுங்கள்.

**6. உற்சாகமூட்டி ஒருவரை ஒருவர் வாழ்த்துங்கள்:** குறிப்பாக பிரசங்கித்தவரை, பாடல் நடத்துனரை, ஜெபத்தினை நடத்தினவர்களை, உடன் கிறிஸ்தவர்களை, புதிய விருந்தினர்களை மேலும் மற்றவர்களையும் இவ்வாறு செய்யுங்கள்.

**7. ஆராதனைக்குப் பிறகு சகோதரர்களை, விசேஷமான விருந்தினர்களை சந்திக்கக் கூடுதல் நேரத்தைச் செலவிடுங்கள்.** வேகமாக வெளியேறிவிடாதீர்கள். மேலும் உங்களுக்குத் தெரிந்தவர்களிடம் மட்டுமே பேசாதீர்கள். விருந்தினர்கள் அல்லது புதிதாக வருகைதந்தவர்களை சந்தோஷமாக ஏற்றுக்கொள்ளும் மனநிலையை உருவாக்குங்கள்.

**-TVOTI**

**இலங்கை ஆசியசேவை SW 25 மேற்றும் 41 மீட்டரில் ஒவ்வொரு சனிக்கிழமையும் மாலை 5.15 முதல் 5.30 வரை ஒலிபரப்பாகும் The Word of Christ ரேடியோ நிகழ்ச்சியை வானொலியிலும் மற்றும் உலகளவில் www.slbc.lk இணையதளத்திலும் கேட்டு பயன்பெறுங்கள்.**



செய்கின்றவர்களை அரசு சிறையில் போட்டு விடுகிறது இல்லையா? ஆனால் ஒரு நிமிடம் பொறுத்திருங்கள்! நீங்கள் பிடிபட்டிருக்கவில்லை, ஏனென்றால் இதன் பொருள் நீங்கள் திருடன் அல்ல என்பதல்ல. மேலும் நீங்கள் ஒருபோதும் பிடிபடாமல் போனாலும், நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்களென்று தேவன் அறிகிறார். மேலும் ஒரு திருடன் இவ்வுலகிலும் வரப்போகிற உலகிலும் கர்த்தருடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க முடியாது. நான் உங்களை வேண்டிக்கொள்ள விரும்புகிறேன், ஆனபடியினால் இயற்கையாகவே கேள்விக்கு விடையளிக்கக் கூடியபடி ஏதாவது செய்துகொண்டிருப்பீர்களென்றால், அதற்காக மனந்திரும்பி தேவனுக்குக் கீழ்ப்படியுங்கள்.

பிறகு சபையிலும் கூட ஒவ்வொரு ஞாயிறும் தங்களுடைய கைகளின் பிரயாசத்தைக் கர்த்தர் கட்டளையிட்டிருக்கிறபடி கொடுக்காமலிருப்பது அல்லது நேரத்தைக் கொடுக்காமல் இருப்பது கர்த்தருடைய வேலைக்கென்று உதவும்படி தாலந்துகளை கொடுக்காமல் இருப்பது போன்றவைகளைச் செய்யும்போது தேவனைக் கொள்ளையடிக்கிறோம். இப்படிப்பட்ட காரியங்களைச் செய்கிற நீங்களும் கூட மனந்திரும்பி தேவனோடு ஒப்புரவாவது அவசியம்.

நீங்கள் கிறிஸ்தவர்களாயில்லாமலிருந்தால், தயவுசெய்து ஒரு கிறிஸ்தவனாக மாறுங்கள். கர்த்தருக்கு நீங்களும் தேவை. அவரில் விசுவாசம் கொண்டு, மனந்திரும்பி அல்லது உங்கள் பாவங்களிலிருந்து விலகி, கிறிஸ்துவே தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டு, உங்களுடைய பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள். இதை நீங்கள் செய்யும்போது கிறிஸ்து உங்களை இரட்சித்து, உங்களை தம்முடைய சபையில் சேர்த்துக்கொள்ளுவார். ஆனால் விசுவாசியாதவனையல்ல (மாற்.16:16; அப்.2:47).

நாம் இந்தப் பாடத்தைக் கற்றுக்கொள்ள நாம் சேர்ந்துகொண்டது பற்றி சந்தோஷப்படுகிறேன், அத்துடன் நீங்கள் அடுத்த முறையும் என்னோடு சேர்ந்து கொள்வீர்கள் என நம்புகிறேன். அதுவரை தேவ கிருபை உங்களோடு இருக்கட்டும்.

## பாடம் - 28 **மகா அன்பளிப்பு - The Greatest Gift** *-Jerry*



- சென்ற மாத இதழின் தொடர்ச்சி

3. இந்த ஏழை விதவை மிகவும் ஆழமான அன்பினால் கொடுத்தாள் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

அ) சிலர் தங்களுக்கு இருக்கும் அதிகமானதிலிருந்து கொடுக்கின்றனர். மற்றவர்கள் பலியிடும்போது கொடுக்கிறார்கள்.

ஆ) எக்காளம் போன்ற காணிக்கைப் பெட்டியில் பணக்காரர்கள் போட்டதில் அவர்களுக்கு ஒரு செலவுமில்லை.

இ) விதவையினுடைய இரண்டு காசுகள் தான் அவளுக்கிருந்தன எல்லாம் அவள் நூறு சதவீதம் கொடுத்துவிட்டாள். அவள் கொடுத்தது கொஞ்சம் ஆனால் அவளுடைய அன்பு பெரியது.

ஈ) ஒரு பாதிப்பை எற்படுத்தும்வரை தேவன் கொடுக்கத்துவங்குவதில்லை. நாம் தேவனுக்கு செலுத்தும் பலிகளிலே அவர் பிரியமாயிருக்கிறார்.

உ) அன்பளிப்புகள் எப்போது நம் அன்பை வெளிப்படுத்துமென்றால் நம்மிடம் எதுவுமில்லாத சமயத்தில் அல்லது அதற்காக இரட்டிப்பாக வேலை செய்ய நேர்ந்தால் அப்படியாகும். சில கிறிஸ்வர்கள் தேவனுடைய வேலைக்குக் கொடுக்கக் வேண்டுமென்று நினைத்தபடி ஒருபோதும் கொடுத்ததில்லை.

ஊ) உலகத்தைச் சுற்றிப்பார்க்க புறப்பட்டு ஒரு கூட்ட மக்களோடு இரண்டு ஐசுவரியமுள்ள கிறிஸ்தவர்களும் புறப்பட்டார்கள். ஒருவர் வழக்குரைஞர் மற்றொருவர் வியாபாரி. கொரியா நாட்டிலே ஒரு வயலிலே ஒரு பையன் கரடுமுரடான ஒரு கலப்பையை இழுத்துக் கொண்டு உழுது கொண்டே சென்றான். ஒரு வயதான மனிதன் அவனை அந்த நெல் வயலை உழும்படி நடத்திக் கொண்டிருந்தார். வழக்குரைஞர் நகைபோடு ஒரு புகைப்படமெடுத்துக் கொண்டார். சபைக் கட்டிடம் கட்டும்போது அதற்குக் கொடுக்கவேண்டுமென்று அவர்கள் தீர்மானித்திருந்தனர். பணமில்லாததால் தங்களுடைய ஒரே காளை மாட்டை விற்று அந்த பணத்தை சபைக்குக் கொடுத்துவிட்டனர். இந்த விவசாய காலத்தில் தாங்களே இழுத்துக்கொண்டு ஏரோட்டுகின்றனர். அவர்கள் தங்கள் வீட்டுக்குத் திரும்பிய பின்பு வக்கீல் அந்தப் படத்தை வைத்துக்கொண்டு பிரசங்கியாரிடம் சென்று இந்தக் கதையைச் சொன்னார். அவர் நாம் சபைக்கு இரண்டு மடங்கு காணிக்கை கொடுக்க விரும்புகிறேன் மேலும் எனக்கு சில ஏர்கலப்பை வாங்கிக் கொடுங்கள் நான் வேலை செய்கிறேன். தியாகம் என்றால் கர்த்தருடைய பார்வையில் உண்மையில் என்ன என்று எனக்கு ஒருபோதும் தெரிந்ததில்லை. நான் செலவு செய்து எதையுமே அவருக்குக் கொடுத்ததில்லை என்பதை நினைத்து வெட்கப்படுகிறேன் என்றார்.

**நிறைவாக**

1. தேவன் விரும்புவதெல்லாம் தியாக பலிகளை ஏதோ பெரிய வேலைகளைச் செய்து அதைப் பிரபலப்படுத்தி கர்த்தரால் பிரதிபலன் பெறத்தேவையில்லை. ஒரு சீடனுக்கு இயேசுவின் நாமத்தினிமித்தம் கொடுக்கும் ஒரு கலசம் குளிர்ந்த தண்ணீருக்குக் கூட பலன் உண்டு.

2. பணக்காரர்களின் பெரிய வெகுமதிகள் கர்த்தரைப் பிரியப்படுத்தாமலிருக்கலாம்.

3. உண்மைதான் அவைகள் பலிசெலுத்தும்போது கொடுக்கப்படாவிட்டால் அல்லது மனப்பூர்வமாய்க் கொடுக்கப்படாவிட்டால்

அ) கர்த்தர் விதவையின் அற்ப காணிக்கையில் பிரியப்பட்டார். கருமியின் அற்பகாணிக்கையில் அல்ல.

4. இந்த சபை கூட்டத்திலே யார் மிகப்பெரிய கொடையாளி தேவன் ஒருவருக்கே பதில் தெரியும். ஆனால் அந்த பதில் நமக்கு ஆச்சரியமளிக்கலாம்.

5. இந்த விதவை செய்ததின் வெளிச்சத்தில் நம்முடைய விசுவாசம், நம்பிக்கை மற்றும் நம்முடைய அற்பணிப்பு ஆகியவற்றை அளவுவிட்டுப் பார்க்கவேண்டும்.


6. இந்த உலகத்தில் நடந்த பணப் பரிமாற்றத்தில் இந்த சிறிய அன்பளிப்பு மிகவும் பிரசித்தி பெற்றவைகளுள் ஒன்று.



கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுடைய மார்க்கத்தை விவரித்துக் காண்பித்த ஒரு ஸ்திரீயைக் குறித்து பார்ப்போம். ஆக்கில்லா என்ற ஒரு யூதனுடைய மனைவி பிரிஸ்கில்லாள் என்பவள் தன் புருஷனோடு கூட ஊழியத்தில் உதவியாக இருந்தாள். இவள் தன் புருஷனோடுகூட தேவனுடைய மார்க்கத்தை அறிந்தவளாயிருந்தபடியால் அதைக் குறித்து மற்றவர்களோடு பகிர்ந்து கொள்கிறாள். அப்.18:24-26 ல் அப்பொழுது அலெக்சந்திரியா பட்டணத்தில் பிறந்தவனும் சாதுரியவானும் வேதாகமங்களில் வல்லவனுமான அப்பொல்லோ என்னும் பேர்கொண்ட ஒரு யூதன் எபேசு பட்டணத்துக்கு வந்தான். அவன் கர்த்தருடைய மார்க்கத்தில் உபதேசிக்கப்பட்டு யோவான் கொடுத்த ஸ்நானத்தை மாத்திரம் அறிந்தவனாயிருந்து, ஆவியில் அனலுள்ளவனாய்க் கர்த்தருக்கு அடுத்தவைகளைத் திட்டமாய்ப் போதகம் பண்ணிக் கொண்டு வந்தான். அவன் ஜெப ஆலயத்தில் தைரியமாய்ப் பேசத் தொடங்கின போது, ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் அவன் பேசுகிறதைக் கேட்டு அவனைச் சேர்த்துக்கொண்டு, தேவனுடைய மார்க்கத்தை அதிகத் திட்டமாய் அவனுக்கு விவரித்துக் காண்பித்தார்கள்" என்று வாசிக்கிறோம். வேதாகமங்களில் வல்லவனாகிய அப்பொல்லோவுக்கு தேவனுடைய மார்க்கத்தைக் குறித்து பிரிஸ்கில்லாள் தன் புருஷனோடுகூட அதிக திட்டமாய் ஸ்திரீகள் தங்கள் கணவனோடு கூட ஊழியத்தில் அவனுக்கு விவரித்துக் காண்பித்தார்கள் என்று வாசிக்கிறோம். உதவியாயிருக்க வேண்டியது அவசியமாகக் காணப்படுகிறது. புருஷனோடு அவர்களது மனைவிமார்களும் செல்லும்போது அநேகர் ஏற்றுக்கொண்டு குடும்பத்தோடுகூட தேவனுடைய மார்க்கத்தைக் கற்றுக்கொள்ள வாய்ப்புண்டாகும். எனவே தேவனுடைய மார்க்கம் எதுவென்று அறிந்த நாம் மார்க்க பேதங்கள் மலிந்து கிடக்கும் இன்றைய நாட்களில் இதைக் குறித்து மற்றவர்ளுக்கு விவரித்துக் காண்பிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம்.

அன்பான சகோதரிகளே, இந்த வேதாகம ஸ்திரீகள் நமக்கு நல்ல மாதிரிகளாக இருக்கிறார்களா? அப்படியானால் நாமும் கூட கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்று, கர்த்தரின் ஊழியர்களை மனமுவந்து நம்முடைய வீட்டில் ஏற்றுக்கொண்டு, தேவனுடைய மார்க்கத்தை அதிகத்திட்டமாய் விவரித்துக் காண்பிக்க நம்மை ஆயத்தப்படுத்துவோம். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை நம்மோடுகூட இருப்பதாக!

*உன்னுடைய நினைவுகளைக் காத்துக்கொள்;*
*அவைகள் வார்த்தைகளாக மாறுகிறது*
*உன்னுடைய வார்த்தைகளைக் காத்துக்கொள்;*
*அவைகள் செயல்களாக மாறுகிறது*
*உன்னுடைய செயல்களைக் காத்துக்கொள்;*
*அவைகள் பழக்கவழக்கங்களாக மாறுகிறது.*
*உன்னுடைய பழக்கவழக்கங்களைக் காத்துக்கொள்;*
*அவைகள் குணமாக மாறுகிறது.*
*உன்னுடைய குணத்தைக் காத்துக்கொள்;*
*அவைகள் உன்னுடைய வழியாக மாறுகிறது.*



**-TVOTI**

மாறவேண்டுமானால் இயேசுகிறிஸ்துவை விசுவாசித்தே ஆக வேண்டும். போக்குச் சொல்ல இடமில்லை.

இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறோம், அதன்பின் என்ன செய்யவேண்டும்? யோசுவா புத்தகம் 2 ம் அதிகாரம் 10-12 வசனங்களில் குறிப்பிட்டுள்ள ஒரு ஸ்திரீயைப் பார்த்து தெரிந்துகொள்வோம். "நூனின் குமாரனாகிய யோசுவா சித்தீமிருந்து வேவுகாராராகிய இரண்டு மனுஷரை இரகசியமாய் வேவுபார்க்கும்படி அனுப்பி; நீங்கள் போய் தேசத்தையும் எரிகோவையும் பார்த்து வாருங்கள் என்றான். அவர்கள் போய் ராகாப் என்னும் பெயர்கொண்ட வேசியின் வீட்டுக்குள் பிரிவேசித்து, அங்கே தங்கினார்கள். பாருங்கள் இவள் ஒரு வேசி, ஆனால் இவள் வேவுக்காரர்களை தன் வீட்டில் ஏற்றுக்கொண்டு, ஒளித்து வைத்து எரிகோ ராஜாவின் கைக்குத் தப்புவித்தாள் (வச.3:6). ஏன் தெரியுமா? இவள் தேவனையும், அவரது அற்புதங்களையும் கேள்விப்பட்டு அவரை விசுவாசித்தாள். ".... உங்கள் தேவனாகிய கர்த்தரே உயர வானத்திலும் கீழே பூமியிலும் தேவனானவர்" (யோசு.2:11) என்றாள். இவளுக்குள் இருந்த விசுவாசம் தேவ ஜனங்களை தன் வீட்டில் ஏற்றுக் கொள்ளப்பண்ணினது. இவளுடைய செயல் இவளையும் இவள் தகப்பன், தாய், சகோதர, சகோதரிகளையும் இவளுக்குண்டான எல்லாவற்றையும் தப்புவிக்கப்பண்ணியது (வச.13). புதிய ஏற்பாட்டு புத்தகத்தில் இவளைப் போன்ற இன்னொரு சகோதரியைக் காணலாம். அப்.16:14-15 ல் கர்த்தருடைய ஜனங்களை ஏற்றுக் கொண்ட லீதியாள் ஒரு செல்வ சீமாட்டி "அப்பொழுது தியத்தீரா ஊராளும் இரத்தாம்பரம் விற்கிறவளும் தேவனை வணங்குகிறவளுமாகிய லீதியாள் என்னும் பேருள்ள ஒரு ஸ்திரீ கேட்டுக் கொண்டிருந்தாள்; பவுல் சொல்லியவைகளைக் கவனிக்கும்படி கர்த்தர் அவள் இருதயத்தைத் திறந்தருளினார். அவளும், அவள் வீட்டாரும் ஞானஸ்நானம் பெற்ற பின்பு, அவள் எங்களை நோக்கி: நீங்கள் என்னைக் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவளென்று எண்ணினால் என் வீட்டிலே வந்து தங்கியிருங்கள் என்று எங்களை வருந்திக் கேட்டுக்கொண்டாள்" (அப்.16:14-15) என பவுல் கூறுவதை வாசிக்கிறோம். கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ள இந்த ஸ்திரீ தானும் தன் வீட்டாரும் ஞானஸ்நானம் பெற்ற பின்பு கர்த்தருடைய ஊழியரை கனம்பண்ணவிரும்புகிறாள். அவர்களை தன் வீட்டிலே தங்கவேண்டுமென வருந்திக் கேட்டுக் கொள்கிறாள். இதை வாசிக்கும் அன்பு சகோதரியே, நீ என்றாவது கர்த்தருடைய ஊழியர்களை உன் வீட்டில் ஏற்றுக்கொண்டுள்ளாயா? நீங்கள் உண்மையாகவே கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவர்களானால் கள்ளங்கபடமின்றி கர்த்தருடைய ஊழியர்களை உங்கள் வீட்டில் ஏற்றுக்கொள்வீர்கள். அப்படிச் செய்யும்போது அதற்கேற்ற பலனை அல்லது ஆசீர்வாதத்தைப் பெறுவீர்கள்.

இப்படியாக கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்று இரட்சிக்கப்பட்டு, கர்த்தர் நிமித்தம் அவருடைய ஊழியர்களை ஏற்றுக் கொள்ளும் சகோதரியாக இருப்பீர்களென்றால் அடுத்ததாக செய்ய வேண்டியது என்னவென்று தெரிந்து கொள்வோமா? நாம் பெற்ற இன்பம் பெருக இவ்வையகம் என்று சொல்லுவார்கள். அவ்வண்ணமே நம்முடைய



பெண்கள் பகுதி

*இயேசு கிறிஸ்து, நித்தியபலி*
Jesus Christ, The Eternal Sacrifice
*-Betty*

# தலை மற்றும் அவருடைய சரீரம்
## The Head and Body




"எப்படியெனில், சரீரம் ஒன்று அதற்கு அவயவங்கள் அநேகம்; ஒரே சரீரத்தின் அவயவங்களெல்லாம் அநேகமாயிருந்தும், சரீரம் ஒன்றாகவேயிருக்கிறது; அந்தப்பிரகாரமாகக் கிறிஸ்துவும் இருக்கிறார்... நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களாயுமிருக்கிறீர்கள்" (1கொரி.12:12,27).

இந்த வசனம் ".... அந்தப்பிரகாரமாக கிறிஸ்துவின் சரீரம் இருக்கிறது" என்று மாத்திரம் கூறவில்லை, அது ஒன்றாகவே; இணைந்திருக்கிறது என்கிறது. ஆனால் இந்த வசனம், "... அந்தப்பிரகாரமாகக் கிறிஸ்துவுமிருக்கிறார்..." என்றும், தம்மை தலையாகவும் அவருடைய சரீரமாகிய சபையாகவும் அடையாளப்படுத்துகின்றார். இப்படியாக முழுவதும் கிறிஸ்து என்று அழைக்கப்படுகிற முழுவதும் ஒன்றுபட்ட ஒன்றாகயிருக்கிறது.

நம்முடைய மனங்கள் அவர் தம்மைத் தாமே வெறுமையாக்கின மாதிரியையும் மற்றும் மனுஷனை பாவத்தின் தண்டனையிலிருந்து விடுவிக்கும்படிக்கு தாமே சுமந்துதீர்த்த தம்முடைய இயற்கை நீதியையும் தெய்வீகத் தன்மையையும் பின்பற்றுகிறதா? தம்முடைய சொந்த நித்திய மகிமையைத் துறப்பதற்கும் மாம்சத்தில் பிறப்பதற்கும் இது அவருக்குப்போதுமானதாகயிருக்கவில்லை; நம்முடைய பாவங்களை தாமாக ஏற்றுக்கொள்ளும் பொருட்டு சிலுவையின் மூலம் மரணத்தின் அவமானத்தை சுமப்பதற்கு இது அவருக்குப் போதுமானதாகயிருக்கவில்லை. அவருடைய உயிர்த்தெழுதலுக்குப் பிறகு அநேகமாக இரண்டாயிரம் ஆண்டுகள் ஆனபடியினால், அவர் மேலும் மனிதர்களாலான சரீரத்திற்கு மேலான தலையாக இருக்கும்படிக்கு தம்மை ஒப்புக்கொடுத்திருக்கிறார்.

அடிக்கடி, மாம்ச சரீரத்தை அடிமைப்படுத்தக் கூடிய இன்னிசையைப் பார்க்கையில், நாம் சங்கிலியால் கட்டப்பட்ட பலமுள்ள சரீரத்தைக் கொண்டிருக்கும் பயத்தில் உள்ளுக்குள் நெளிகிறோம் அல்லது மனமுடைந்து அல்லது ஆரோக்கியமும், புத்தியுமுள்ள மனம் செயலிழந்துபோன சரீரத்தில் சிறைபட்டு போகிறோம். வயது முதிர்ந்த சிறையிருப்பு ஏறக்குறைய பீதியடையச் செய்கிறது. இப்படிப்பட்ட சிறையிருப்புகளுடன் வாழ்வது ஒவ்வொரு வருடமும் எப்பேர்பட்ட ஏமாற்றமும் மனமுடையதாக இருக்கும்!

**சரீரத்தினால் சுமந்த பாடுகள்**

நாம் சிலநேரங்களில் அவருடைய செயலாக, சில சமயங்களில்

ஆர்வமிக்கவர்களாக, சில சமயங்களில் சோம்பலாக, சில சமங்களில் எதிர்க்கிறவர்களாக, சில சமயங்களில் செயலிழந்தவர்களாக, சில சமயங்களில் இவ்வுலகில் செத்த சரீரமாக இருக்கிறபடியால் மெய்யான வழியில், நம்முடைய உயிர்த்தெழுந்த கிறிஸ்து ஒவ்வொரு நாளும் நம்முடைய தலையாக இருப்பதில் எல்லைக்குட்பட்ட தடைகளை அனுபவிக்கிறார்.

சரீரத்தோடுள்ள உறவில் தலையின் பங்கு என்ன? இது தன்னிச்சையான, தன்னிச்சையற்ற செயல்பாடுகளின், எண்ணங்களின் பிறப்பிடத்தின் முளையாக இருக்கிறது. தலை பார்க்கிறது, ஆசைப்படுகிறது, விரும்புகிறது; ஆனால் இது ஒன்றோடொன்று இணைந்து வேலைசெய்யும் சரீரத்தின் அங்கங்களை, பார்வையை நேர்ப்படுத்தும்படிக்கு சார்ந்திருக்கவேண்டும்.

கிறிஸ்து அற்புதத்தினால் இருதயங்களை மாற்றும்படிக்கு பூமிக்கு இறங்கி வந்திருக்கிறாரா? தேவதூதர்கள் உலகத்தை சுற்றிவந்து சுவிசேஷத்தை பிரசங்கித்துக் கொண்டிருக்கிறார்களா?

தேவன் ஆதியிலிருந்தே மனிதனுக்கு இரட்சிப்பின் வழியைத் திறக்கும் நோக்கிற்காகவே இவையெல்லாவற்றையும் செய்திருக்கிறார். கிறிஸ்து அந்த இலக்கை அடையும்படிக்கு மரித்தார்.

ஆனால் தேவன் பரலோகத்திலிருந்து ஜனங்களிடம் நேரடியாக பேசுகிறாரா? கிறிஸ்து இருதயங்களை மாற்றும்படிக்கு அற்புதங்களோடு இறங்கிவந்தாரா? தேவ தூதர்கள் உலகத்தைச் சுற்றிவந்து சுவிசேஷத்தைப் போதிக்கின்றார்களா? இல்லை.

பிறகு இவைகளெல்லாம் யாருடைய கரங்களில் உள்ளன? அவருடைய சரீரத்தின் கரங்களில். தலை உலகத்தைப் பார்க்கிறது; அவர் இழந்துபோனவர்களுக்காக ஏங்குகிறார்; எல்லாரும் சுவிசேஷத்தின் அன்பையும், இரக்கத்தையும் உணரவேண்டுமென அவர் விரும்புகிறார். மூளையிலிருந்து கண்களுக்கும், நாவிற்கும், கைகளுக்கும், கால்களுக்கும் இருதயத்திற்கும் செய்திகள் அனுப்பப்பட்டு வருகிறது. அங்கே ஒருமித்த பிரதியுத்திரங்கள் காணப்படும்போது, அநாதி தீர்மானங்கள் நிறைவேறுகிறது என்று அவர் அறியவேண்டும் என்பது எப்பேர்பட்ட மகிழ்ச்சி!

ஆனால், தலையிலிருந்து செய்தி அனுப்பப்பட்டு, போதனைகளுக்கு செவிசாய்க்க தம்முடைய சரீரத்தின் அங்கங்கள் மறுக்கும்போது அவர் ஏமாற்றத்தையும் மன வேதனையையும் அனுபவிக்கவேண்டும் என்பதை நினைத்துப் பாருங்கள். எத்தனை முறை அவர் நம்முடைய சோம்பல் அல்லது செயலற்ற நிலையினால் சிறைப்படுத்தப்படுகிறார் என்பதை சிந்தியுங்கள். அவருடைய சரீரத்தில் அங்கங்கள் அவரைக் காட்டிக்கொடுத்து துரோகம் பண்ணும்போது எவ்வளவு மனவேதனை அடையவேண்டியுள்ளது என்பதையும், நம்முடைய வெட்கக்கேடான செயல்களால் எவ்வளவு அதிகமாக அவருடைய மகிமை அவதூறு செய்யப்படுகிறது என்பதையும் சிந்தியுங்கள். தேவனுடைய சாராம்சம், பொய், வஞ்சனை, ஒழுக்கம் கெட்ட வாழ்வு, தீமையான நினைவுகளில் சந்தோஷப்படுதல், கெட்டவார்த்தைகளை பயன்படுத்துதல், வீட்டைக் களைத்தல், திக்கற்றவர்களுக்கு உதவி செய்வதைத் தவிர்த்தல் போன்றவற்றில் அவர் விருப்பம் கொள்வாரா? அவருடைய சரீரமாக நாம் எதைச்செய்தாலும், அவருக்கென்றே நேரடியாகச் செய்வோமாக.

வாரந்தோறும், அவருடைய சரீரத்தில் பங்குகொள்ளுவதினால் அவருக்குள் நாம் ஜீவிக்கிறவர்களாவோம். அனுதினமும் நாம் அவருடைய சரீரமாக இருக்கிறபடியால் நாம் அவரில் ஜீவிப்போமாக!



பெண்கள் பகுதி

# வேதாகமத்தில் சில ஸ்திரீகள்

## *A Few Women In The Bible*

*-Glory Arjunan*



உலகில் ஸ்திரீகளின் பங்கு அதிகரித்துக் கொண்டே வருகிறது. எல்லாத் துறைகளில் ஸ்திரீகள் சாதனை ஸ்திரீகளாக விளங்குகின்றனர். அரசும் ஸ்திரீகளுக்கென பல பல திட்டங்ககளை வகுத்து, நடைமுறைப் படுத்தி ஊக்குவிக்கின்றது. ஆனால் நாம் பார்க்கப்போகிற வேதாகம ஸ்திரீகளோ ஆவிக்கேற்ற ரீதியில் நமக்கெல்லாம் நல்மாதிரிகளாக இருக்கின்றனர்.

அப்போஸ்தலர் 17:4 ல் சில கனமுள்ள ஸ்திரீகளைக் குறித்து எழுதப்பட்டுள்ளது. 'அவர்களில் ...கனம் பொருந்திய ஸ்திரீகளில் அநேகரும் விசுவாசித்து, பவுலையும் சீலாவையும் சேர்ந்து கொண்டார்கள்". இங்கே பவுல் கிறிஸ்துவின் பாடு, மரணம் மற்றும் உயிர்த்தெழுதலைக் குறித்து பிரசங்கித்து இயேசுவே கிறிஸ்து என்றும் காண்பித்து திருஷ்டாந்தப்படுத்தினான் என வாசிக்கிறோம் (வச.2-3) மேலும் அதே அதிகாரம் வசனம் 12 ல் கனம் பொருந்திய அநேக ஸ்திரீகளும் விசுவாசித்தார்கள் என எழுதப்பட்டுள்ளது. கனம் பொருந்திய ஸ்திரீகள் கிறிஸ்துவை விசுவாசித்தனர். அப்படியானால் இவர்கள் நல்ல வசதி வாய்ப்புடனிருந்திருக்க வேண்டும். கல்வியறிவுள்ளவர்களாக, நல்ல பதவி வகிக்கிறவர்களாக இருந்திருக்க வேண்டும் எனவே தான் இவர்கள் கனம் பொருந்திய ஸ்திரீகளெனக் குறிப்பிடப்பட்டுள்ளனர். ஒரு முறை எனக்கு அறிமுகமான ஒரு பெண் என்னிடம் ஏன் கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவைக் குறித்து ஏழை எளியவர், கல்வியறிவு அற்றவர், சிறுமையானவர்களுக்கு மட்டுமே அறிவிக்கின்றனர்? இப்பேர்பட்டவர்கள் தான் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்கின்றனர் என இழிவான நோக்கத்தோடு கேட்டாள். இன்றும் அநேகர் குறிப்பாக புறமார்க்கத்தார் இப்படித்தான் எண்ணுகின்றனர். கிறிஸ்து இயேசு இவ்வுலகத்தையே இரட்சிக்க வந்தவர். உலகில் பலதரப்பட்ட மக்கள் தான் வாழ்கின்றனர். இதில் ஏழை பணக்காரர் என்றோ கற்றவர் கல்லாதவர் என்றோ, உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்றோ வித்தியாசமில்லை. கிறிஸ்துவை அனைவருமே விசுவாசிக்க வேண்டும். வேறு வழியே கிடையாது. அவர் எல்லா மனுஷரின் பாவத்தைப் போக்கும் பலியாக வந்தவர். மரித்தார், உயிர்த்தெழுந்தார். இன்றும் உயிரோடிருக்கிறார். இச்செய்தியினைத் தான் கிரேக்க நாட்டு பெண்மணிகளாகிய அந்த கனம்பொருந்திய ஸ்திரீகள் விசுவாசித்தார்கள். "அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார்" (யோவா.1:12). பாவத்தின் விளைவாக பிசாசின் மக்களாக மாறிப்போன நாம் தேவனுடைய பிள்ளையாக